செ. கு. எண்: 058 நாள்: 22.04.2018

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின்

## 29–வது சாலைப் பாதுகாப்பு வார வாழ்த்துச் செய்தி

பொது மக்களிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் ‘‘சாலைப் பாதுகாப்பு வாரம்’’ 23.4.2018 முதல் 30.4.2018 வரை கடைப்பிடிக்கப்பட உள்ளது. இந்த ஆண்டு 29–வது சாலைப் பாதுகாப்பு வார விழா, **‘‘சாலை பாதுகாப்பு – உயிரின் பாதுகாப்பு**’’ என்ற கருப்பொருளை மையப்படுத்துகிறது.

சில சமயம் சாலை விபத்துகளினால் பொருளீட்டும் நபர்களை குடும்பங்கள் இழந்து வாடுகின்றன. அதனால் அக்குடும்பங்களின் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்பட்டு, பொருளாதார ரீதியாகவும் மிகுந்த துயரங்களுக்கு ஆளாகின்றனர்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பாதுகாப்பான சாலைப் பயணத்தை உறுதி செய்யும் வகையில் சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி வருகின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் விழிப்புணர்வு முகாம்களை நடத்திட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல், அகில இந்திய வானொலி பண்பலை சேவைகளின் மூலம் நாள்தோறும் சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வாசகங்களை ஒலிபரப்பு செய்தல், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் கூடுதல் அவசர விபத்து சிகிச்சை மையங்கள் ஏற்படுத்துதல், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் நெடுஞ்சாலை ரோந்து குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இரவு பகலாக போக்குவரத்து விதிமீறல்களை கண்காணித்து நடவடிக்கை எடுத்தல், விபத்தில் சிக்கும் வாகனங்களை அப்புறப்படுத்த மீட்பு வாகனங்கள் வழங்குதல் போன்ற திட்டங்களை சீரிய முறையில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, 2016ஆம் ஆண்டைவிட 2017ஆம் ஆண்டு சாலை விபத்துகள் 8.22 சதவிகிதம் குறைந்துள்ளதுடன், சாலை விபத்துகளினால் ஏற்படும் இறப்புகள் 6.16 சதவிகிதம் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு விபத்து தடுப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டாலும், ‘‘வேகம் விவேகமன்று’’ என்பதை உணர்ந்து, மிதமான வேகத்துடன் அனைவரும் கவனமாக சாலை விதிகளை கடைப்பிடித்தால் மட்டுமே விபத்தில்லா பயணம் சாத்தியமாகும். எனவே, மக்கள் அனைவரும் சாலை விதிகளை முழுமையாகக் கடைப்பிடித்து, விலைமதிப்பற்ற மனித உயிர் இழப்புகளைத் தவிர்க்க உதவ வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**